பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

16 11 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- கப்பல் கட்டுமானத் துறையில் உலகின் முன்னணி நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- திரைப்படத் துறையில் இளைஞர்களின் படைப்பாற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
- சிறந்த போக்குவரத்து சேவைக்கான தேசிய விருது சென்னை மாநகர போக்குவரத்துத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.
- உலகக்கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கப்பல் கட்டுமானத் துறையில் உலகின் முன்னணி நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கப்பல் கட்மானத் துறையில் இந்தியா-தென்கொரியா நாடுகளிடையேயான ஒத்துழைப்பு இத்துறையில் அதிகரித்து வரும் இந்தியாவின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவிடும் என்று தெரிவித்துள்ளார்.

இத்துறையில் தென்கொரிய நிறுவனங்களில் தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அனுபவம் நாட்டின் கப்பல் கட்டுமானத் துறையை மேம்படுத்த உதவும் என்று அவர் கூறியுள்ளார்.

கப்பல் கட்டுமானத் துறையை மேம்படுத்துவதற்கான செலவுகளை 5 ஆண்டு காலத்திற்குள் மீட்டெடுக்க முடியும் என்றும், இதுபோன்ற நடவடிக்கைகள் உலகின் முக்கிய கடல்சார் மையமாக இந்தியாவை உருவெடுக்கச் செய்யும் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

கோவாவில் நடைபெற உள்ள இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் 84 நாடுகளைச் சேர்ந்த 270 திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

பனாஜியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது திரைப்படத் துறையில் உலக அளவில் இந்தியாவின் நிலையை உயர்த்துவதாக உள்ளது என்று கூறினார்.

இளைஞர்களின் படைப்பாற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர தெரிவித்தார்.

இநத் ஆண்டு நடைபெறும் திரைப்பட விழாவில் 174 இளம் படைப்பாளர்கள் தங்களது படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பெண் இயக்குநர்கள் இயக்கிய 50 திரைப்படங்களும் இந்த விழாவில் இடம்பெற உள்ளதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

<<<<>>>>

சிறந்த போக்குவரத்து சேவைக்கான தேசிய விருது சென்னை மாநகர போக்குவரத்துத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அதிநவீன பேருந்து சேவை விரைவில் தொடங்கப்படும் என்று தெரிவித்தார்.

போக்குவரத்து துறை லாபம் ஈட்டும் வகையில் சில்லரை டீசல், பெட்ரோல் விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மாற்றுத்திறனாளிகள், தமிழறிஞர்கள், சுதந்திரப் போராட்ட தியாகிகள் உள்ளிட்டோருக்கு இலவசப் பயணத்திற்கான அட்டையை இணையதளம் வாயிலாக பெற்றுக்கொள்ளும் வசதியை மாநில அமைச்சர்கள் திரு. சிவசங்கர் மற்றும் திரு. மா. சுப்பிரமணியன் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர்.

<<<<>>>>

குப்பையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் கோவை மற்றும் மதுரையில் விரைவில் தொடங்கப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துதுறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னையில் இத்திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் வாக்காளர் தீவிர திருத்தப் பணிகளில் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் அதிக எண்ணிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக திரு. நேரு தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தூத்துக்குடியில் பிரச்சாரப் பயணம் மேற்கொண்ட அவர், இதன் காரணமாக பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

காங்கிரஸ் - திமுக கூட்டணி ஆட்சிக் காலத்தில்தான் கச்சத்தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டதாகவும், இதனால் தமிழக மீனவர்களின் நலன்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கோவில்பட்டி பகுதியில் உற்பத்தியாகும் மக்காசோளத்தை பிற மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு தமிழக அரசு வரி விதித்து வருவதாக திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.

<<<<>>>>

தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து செல்லக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், காஞ்சிபுரம், விழுப்புரம், செங்கல்பட்டு, மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 4 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாமக்கல், சேலம், ஈரோடு, பெருந்துறை, கோவை உள்ளிட்ட நகரங்களில் கோழிப் பண்ணை பிரதான தொழிலாக இருந்து வருகிறது.

இப்பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் முட்டைகளுக்கான கொள்முதல் விலை முதல் முறையாக 5 ரூபாய் 95 காசுகள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டம் ஜோதிபுரம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட உட்புறச் சாலையின் இரு பகுதிகளிலும் உள்ள இடைவெளியை சரிசெய்யுமாறு அப்பகுதி மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதாக பஞ்சாயத்ராஜ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் சார்பில் பிரதமர் அலுவலக பொதுமக்கள் குறைதீர்ப்பு பிரிவுக்கு அளிக்கப்பட்டு புகார் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்டதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்கில் ஜி-20 உச்சிமாநாடு வரும் 22, 23 தேதிகளில் திட்டமிட்டபடி நடைபெறும் என்று அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

காங்கோவில் நடைபெற்று வரும் போராட்டத்தை முடிவிற்கு கொண்டு வரும் நோக்கில் அந்நாட்டு அரசு மற்றும் கிளர்ச்சியாளர்களிடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

<<<<>>>>

இந்தோனேஷியாவின் ஜாவா மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது.

<<<<>>>>

சட்டவிரோதமாக எல்லையை கடக்க முயன்ற பங்களாதேஷை சேர்ந்த நான்கு பெண்கள் உட்பட 7 பேர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

மோசடி மற்றும் போலியான ஆவணங்கள் தொடர்பாக அல்-ஃபலா பல்கலைக்கழகத்திற்கு எதிராக முதல் தகவல் அறிக்கையை தில்லி குற்றவியல் பிரிவு காவல்துறை பதிவு செய்துள்ளது.

<<<<>>>>

கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்த அனைத்துகட்சிக் கூட்டம் அம்மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி திரு ரத்தன் கேல்கர் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

கூட்டுறவுத்துறையில் சிறப்பாக செயல்பட்ட 21 சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு மாநில வனத்துறை அமைச்சர் திரு ராஜகண்ணப்பன் கேடயங்களை வழங்கினார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் வள்ளல் பச்சையப்பன் சாலையில் புனரமைக்கப்பட்ட அறிஞர் அண்ணா பட்டு வளாகத்தை மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி ஆய்வு செய்தார்.

<<<<>>>>

தேனி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை நடைபெறும் என்று ஆட்சியர் திரு  ரஞ்ஜித் சிங் கூறியுள்ளார்.

<<<<>>>>

மயிலாடுதுறையில் காவிரி துலா உற்சவத்தின் முக்கிய நிகழ்ச்சியான கடைமுக தீர்த்தவாரி இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

கோவாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அமெரிக்காவின் Levon Aronian-ஐ வென்றார்.

<<<<>>>>

பார்வை குறைபாடு கொண்டவர்களுக்கான உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

உலக குத்துச்சண்டை இறுதிச்சுற்றுப் போட்டி உத்தரப்பிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டாவில் இன்று தொடங்குகிறது.

வரும் 20ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியா உள்ளிட்ட 18 நாடுகளைச் சேர்ந்த 130 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>